Diploma, Anna University-UG, PG., HSC & SSLC

*Notes*
*Syllabus*
*Question Papers*
*Results and Many more…*

*Available @*
www.AllAbtEngg.com

**KA** **முதல் இடைப்பருவ பொதுத்தேர்வு - 2019**

Reg.No [redacted]014

**பத்தாம் வகுப்பு**

**தமிழ் முதல் தாள்**

*நேரம்: 1.15 மணி* *மதிப்பெண்கள்: 50*

**I. அனைத்து வினாக்களுக்கும் விடை தருக:** 10 x 1 = 10

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:**

1. 'தென்னன்' என்னும் சொல் தரும் பொருள்
அ) சேரன் ஆ) சோழன் இ) பாண்டியன் ஈ) பல்லவன்
2. 'பாடு இமிழ் பனிக்கடல் பருகி' என்னும் முல்லைப்பாட்டு அடி உணர்த்தும் அறிவியல் செய்தி யாது?
அ) கடல் நீர் ஆவியாகி மேகமாதல் ஆ) கடல் நீர் குளிர்ச்சியடைதல்
இ) கடல் நீர் ஒலித்தல் ஈ) கடல் நீர் கொந்தளித்தல்
3. அடி மரத்திினின்று பிரியும் மாபெரும் கிளை
அ) கொம்பு ஆ) கவை இ) கொப்பு ஈ) கிளை
4. பின்வருவனவற்றுள் முறையான தொடர்
அ) தமிழர் பண்பாட்டில் தனித்த வாழை இலைக்கு இடமுண்டு
ஆ) தமிழர் வாழை இலைக்குப் பண்பாட்டில் தனித்த இடமுண்டு
இ) தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்குத் தனித்த இடமுண்டு
ஈ) தமிழர் வாழை பண்பாட்டில் தனித்த இலைக்கு இடமுண்டு

**கோடிட்ட இடத்தை நிரப்புக:**

5. முல்லைப் பாட்டின் ஆசிரியர் ________.
6. முத்துக் குளித்தலுக்குச் சிறப்புப் பெற்ற துறைமுகம் ________.
7. 'மோப்பக் குழையும் அனிச்சம்' - எனக்கூறும் நூல் ________.
8. உலகத் தமிழ்க் கழகத்தை நிறுவி அதன் தலைவராக இருந்தவர் ________.

பொருத்துக:

9. பூவின் தோற்ற நிலை - செம்மல்
10. பூ வாடின நிலை - வீ
 - அரும்பு

**II. கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு மூன்று வரிகளுக்கு மிகாமல் விடை தருக:** 3 x 2 = 6

11. மன்னும் சிலம்பே! மணிமேகலைவடிவே! முன்னும் நினைவால்
முடி தாழ வாழ்த்துவமே!
- இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள காப்பியங்களைத் தவிர எஞ்சியுள்ள ஐம்பெருங்காப்பியங்களின் பெயர்களை எழுதுக.
12. கடல் எவற்றைத் தருகிறது?
13. 'இறடிப் பொம்மல் பெறுகுவீர்' - தொடர் உணர்த்தும் பொருளை எழுதுக.
14. உயிரினும் ஓம்பப்படுவது எது? ஏன்?

**III. கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் இரண்டனுக்கு ஐந்து வரிகளுக்கு மிகாமல் விடை தருக:** 2 x 3 = 6

15. தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவன யாவை?
16. பத்துப்பாட்டு நூல்கள் யாவை?
17. அதிவீரராம பாண்டியன் - ஆசிரியர் குறிப்பு தருக.

*Available in /AllAbtEngg Android App too,* *Also check www.SmartPoet.Net & www.PhotoShip.Net*

Diploma, Anna University-UG, PG., HSC & SSLC

*Notes* *Available @*
*Syllabus* www.AllAbtEngg.com
*Question Papers*
*Results and Many more…*



**IV. கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் ஒன்றனுக்கு விடையளி:** 1 x 5 = 5

18. முல்லைப் பாட்டில் உள்ள கார்காலச் செய்திகளை விவரித்து எழுதுக.
19. உங்கள் இல்லத்துக்கு வந்த உறவினருக்கு நீங்கள் செய்த விருந்தோம்பலை அழகுற விவரித்து எழுதுக.

**V. கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு மூன்று வரிகளுக்கு மிகாமல் விடை தருக:** 3 x 2 = 6

20. ஒரு தாற்றில் பல சீப்பு வாழைப்பழங்கள் உள்ளன.
    ஒரு சீப்பில் பல தாறு வாழைப்பழங்கள் உள்ளன.
    ஒரு சீப்பில் பல வாழைப்பழங்கள் உள்ளன
    - மேற்கண்ட தொடர்களில் சரியான தொடர்களைச் சுட்டிக்காட்டுக.
21. விருந்தோம்பல் என்றால் என்ன?
22. காற்றுக்கு வழங்கும் பெயர்கள் நான்கினை தருக.
23. 'மருந்தே ஆயினும் விருந்தொடு உண்' எனக் கூறும் நூல் மற்றும் கூறிய ஆசிரியர் பெயர்?

**VI. கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் இரண்டனுக்கு ஐந்து வரிகளுக்கு மிகாமல் விடை தருக:** 2 x 3 = 6

24. 'புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது'
    இது போல் இளம் பயிர் வகை ஐந்தின் பெயர்களைத் தொடர்களில் அமைக்க.
25. காற்று மாசுபடாமல் இருக்க நாம் என்ன செய்ய வேண்டும்?
26. முல்லை நிலத்திலிருந்தும் மருத நிலத்திலிருந்தும் கிடைக்கும் உணவு பொருள்கள் யாவை?

**VII. கீழ்க்காணும் வினாக்களுள் ஒன்றனுக்கு விடையளி:** 1 x 5 = 5

27. தமிழின் சொல் வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரைக் குறிப்புகளை எழுதுக.
28. காற்றினால் நமக்கு கிடைக்கும் பயன்கள் யாவை?

**VIII. மனப்பாடப் பாடலை அடிபிறழாமல் எழுதுக:** 4 + 2 = 6

29. அன்னை மொழியே! எனத் தொடங்கும் பாடலின் கடைசி நான்கு வரி மட்டும் எழுதுக.
30. எப்பொருள் எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

*****

*Available in /AllAbtEngg Android App too,* *Also check www.SmartPoet.Net & www.PhotoShip.Net*